1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சித்திலிங்கி—தர்மபுரி மாவட்ட எல்லை வரையுள்ள 16 கி. மீ. நீளமுடைய சாலை ஒரு வண்டிப் பாதையாகும். அதைச் செப்பனிட்டுச் சாலைப் போக்கு வரத்துக்கு ஏற்புடையதாக ஆக்க 18 லட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலைத் தட்டுப்பாடு காரணமாகத் தற் போது ஏற்றுக்கொள்வதற்கில்லை. வரும் திட்ட ஆண்டில் அது பரிசீலிக்கப்படும்.

இன விருத்திக் காளைகள் இறக்குமதி.

* வினா 843— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் நமது மாநிலத்திற்கு வெளிநாட்டில் இருந்து இன விருத்தி செய்ய காளைகள் ஏதேனும் வரவழைக்கப் பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு விமான கட்டணமாகச் செலுத் தப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) ஆம். நடப்பாண்டில் நமது மாநிலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை உயரின கால்நடை வளர்ப்புப் பண்ணைக்கு, ஆஸ்திரேலியாவிலிருந்து இரண்டு ஜெர்சி உயரின பொலி காளைகள் வரவழைக்கப்பட்டன.

(ஆ) அதற்கு விமானக் கட்டணம் ஏதும் இந்த அரசினால் செலுத்தப்படவில்லை.

திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : வெளிநாடுகளிலிருந்து எவ்வளவு காளைகள் வரவழைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது ? அதில் எவ்வளவு காளைகள் வந்திருக்கின்றன ? இன்னும் எவ்வளவு காளைகள் வரவேண்டும்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : வெளி நாட்டிலிருந்து 240 ஜெர்சி இன கிடேரிகளும் 10 ஜெர்சி இன இளங்காளைகளும் வரவேண்டும். தற்போது 50 ஜெர்சி கிடேரிகளும் 2 ஜெர்சி இளங்காளைகளும் வந்திருக்கின்றன. மிச்சம் 198 கால்நடைகளைச் சீக்கிரம் அனுப்பி வைக்கவேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

[1978 ஏப்ரல் 7

திரு. செ. சதாசிவம்: இப்போது வரவழைக்கப்பட்டிருக்கிற காளேகள் நமக்கு இனமாக அனுப்பப்பட்டிருக்கிறதா அல்லது அவை விலைக்கு வாங்கப் பட்டிருக்கிறதா? விலைக்கு வாங்கப்பட்டிருந் தால் அவற்றின் விலை என்ன?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : முழுக்கமுழுக்க இனமாகவே விமான போக்குவரத்துச் செலவு உட்பட அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. காளியப்பன் : தமிழ்நாட்டில் மொத்தம் எவ்வளவு கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன? அவற்றில் என்னென்ன கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தமிழ்நாட்டில் மொத்தம் எட்டு கால்நடைப் பண்ணைகள் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில், ஒசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் சிந்தி, ஜெர்சி உயரினம், கலப்பினம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப்பண்ணையில் சிந்தி, பிரௌண், சுவிஸ் உயரினம், ஜெர்சி உயரினம், கலப்பினம், முர்ரா எருமை, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் சிந்தி, காங்கேயம், கலப்பினம், முர்ரா எருமை; இராமநாதபுரம் மாவட்டத்தில், செட்டிநாட்டில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் தர்பார்க்கர், சிந்தி, கலப்பினம், முர்ரா எருமை, திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட கால்நடைப்பண்ணை, அபிசேகப்பட்டியில், கிர், கலப்பினம், முர்ரா எருமை, நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் பிரீசியன் உயரினம், கலப்பினம் கொருக்கை கால் நடைப்பண்ணையில் உம்பளச்சேரி, கலப்பினம்; ஈச்சங்கோட்டையில் உள்ள உயரின கால்நடை அபிவிருத்திப் பண்ணையில் ஜெர்சி உயரினம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. செல்லப்பன் : தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரத்த நாடு, ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் விவசாயி களுக்குப் பயன்படும் அளவிற்கு மானியமாக காளைகள், கிடாக்கள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : அதிக அளவில் பால் கொடுக்கிற முர்ரா எருமைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அரசு கேட்டிருக்கிறதா? அப்படிக் கேட்டிருந்தால் எந்தெந்த நாடுகளிலிருந்து கேட்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அப்படிப்பட்ட திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

1978 ஏப்ரல் 7]

திரு. பெ. சு. திருவேங்கடம் ; அமைச்சர் அவர்கள் அறிவித்தவை பால் அதிகமாக வரக்கூடிய அளவிற்கு பயன்படும். உழுவிற்குப் பயன்படுகிற அளவிற்கு காங்கேயம் காளைகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ; பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் இருக்கிற மாட்டுப்பண்ணையை எடுத்துக் கொள்ளலாமா என்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலே சிறப்பாக விளங்குகின்ற, ஒசூர் கால்நடைப் பண்ணைக்கு இன அபிவிருத்திக்காக, காளைமாடுகள், கிடாரிகள் எத்தனை கொடுக்கப்பட்டன. இன்னும் எவ்வளவு கொடுக்கப் படும் என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே; இதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

திருச்சியில் பர்மா இலங்கை அகதிகளுக்கு வீடுகள்.

* 844 வினு— திரு. சி. மாணிக்கம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்- கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் பர்மா, இலங்கை அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டும் வேலை எப்போது துவங்கப் படும்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: திருச்சியில்; பர்மா இலங்கை அகதிகளுக்காக வீடு கட்டுவதற்கென்று நிலம் ஒதுக்கப் படவில்லை.

திரு. கூ. ச. முருகேசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் திருவரம்பூர் தொகுதியில் காமராஜ் நகர் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் பர்மா இலங்கை தமிழர்கள் இருக்கிறார்கள். குண்டூர் என்ற பகுதியிலும் பர்மா தமிழர்கள் இருக்கிறார்கள். வாழவந்தான்கோட்டையிலும் பர்மா அகதிகள் இருந்துவருகிறார்கள். இங்கெல்லாம் காலனி இருக் கின்ற இடங்களில் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இடமிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி ; அரசாங்கத்திற்கு உரிய முறையில் விண்ணப்பங்களை செய்தால் நிச்சயமாக வீடுகள் கட்டுவதற்கு கடன் வழங்க அரசு முன் வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.